# அதிரடிப் படையினரால் 17 தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை

விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 82 கார்த்திகை 28 ஜ. அவ்வல் பிறை: 26 இதழ்: 233

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14-12-1990

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்திலுள்ள காரைதீவு விபுலானந்த மகா வித்தியாலயத்திலுள்ள அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த 17 தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா அதிரடிப்படையினால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

நேற்றுமுன்தினம் இதே முகாமினைச் சுற்றிவளைத்த படையினர் அங்கிருந்த பலரை துன்புறுத்தியதுடன் சந்தேகத்தின்பேரில் 17 இளைஞர்களைக் கைதுசெய்து தம்முடன் அழைத்துச்சென்றார்கள்.

அழைத்துச்சென்ற சில நிமிடங்களில் கைகள், கால்கள்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல்படையால் 4 தமிழர்கள் கொலை

(திருமலை)
திருகோணமலையில் நான்கு தமிழர்கள் நேற்று ஊர்காவல் படையினரால் கொடுமையான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கிண்ணியா, உப்பாறு பகு
(4-ம் பக்கம் பார்க்க)

# திருமலையில் விமான தாக்குதல்

# 48 தமிழர்கள் மரணம்

## பலர் காயம்; 7 வாகனங்கள் சேதம்

(திருமலை)
திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் நாற்பத்தெட்டுத் தமிழர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இத்தாக்குதலினால் பலர் காயமடைந்துள்ளதுடன் ஏழு வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூன்றிற்கும் அதிகமான பொம்மர் விமானங்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் இச்சம்பவத்தில் இறந்தவர்கள் காயமடைந்தவர்கள் விபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இச்செய்தி அச்சுக்குப்
(4-ம் பக்கம் பார்க்க)

## விசேட பரீட்சைக்கு அனுமதி

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை
(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. உறுப்பினர்க்கு தென்னிந்தியாவில் பயிற்சி?

(புதுடில்லி)
ஜே. வி. பி. இயக்க உறுப்பினர்களுக்கு தென்னிந்தியாவில் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இதற்கு முன்னேற்பாடாக தற்போது இவ்வியக்கத்தின் தலைவராக இருக்கும் திரு. சோமவன்சா அமரசிங்கா அண்மையில் தென்னிந்தியா சென்றுள்ளார்.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தினால் தேடப்பட்டு வந்த பல ஜே. வி. பி. உறுப்பினர்களும் அண்மையில் தென்னிந்தியாவுக்குத் தப்பியோடிவிட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தப்பியோடியவர்களுக்குத்
(4-ம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை நகரில் 14 தமிழர்கள் கடத்தல்

(திருமலை)
திருகோணமலை நகரில் பதினான்கு தமிழர்கள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள இந்தநகரில் கடத்தப்பட்ட தமிழர்களின் விபரமெதுவும் பெறமுடியா
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சனைதீர்வுக்கு; இடைக்கால அரசு யோசனை

(கொழும்பு)
இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்குடன் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் சிறிலங்கா அரசுடனும் தனித்தனியே பேச்சு நடத்தி அவர்களின் கருத்தை அறிவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவிருப்ப
(4ம் பக்கம் பார்க்க)

## மூளைக்காய்ச்சலினால் 6 பேர் மரணம்

(கொழும்பு)
புத்தளத்தில் ஆறுபேர் மூளைக்காய்ச்சலினால் இறந்துள்ளதாக சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து மூளைநோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (எஸ்)

## யாழ். நகரில் ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரில் நீண்ட இடைவெளிக்குப்பின் நேற்று மாலை மணியளவில் ஹெலி தாக்குதல் இடம்பெற்றது.

நகர வீதிகளில் நின்ற மக்கள் யாழ். ஆஸ்பத்திரி வள
(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கடத்தப்பட்ட 8 லொறி சாரதிகள் திரும்பவில்லை ஒருவர்மட்டும் சடலமாக மீட்பு

(நமது நிருபர் கணேசராசா)

வவுனியா சர்வோதய முகாமிற்கு அருகில் லொறிகளை நிறுத்திவிட்டு படுத்திருந்தோம். நள்ளிரவு இனந்தெரியாத 20 பேர் வந்து, லொறி ஒன்று சேற்றில் புதைந்திருப்பதாகவும், அதனை மீட்க உதவி செய்யுமாறும் கூறி கடத்தப்பட்ட லொறி சாரதிகள், கிளினர்கள் உட்பட 9 பேரை கூட்டிச்சென்றனர். அவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். மற்றவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சுகின்றேன்.

வவுனியாவிலிருந்து சைக்கிளில் தப்பிவந்த நீர்வேலியை சேர்ந்த வி. தங்கராசா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

மறுநாள் காலை, கூட்டிச் சென்றவரில் ஒருவர் முகத்தில் கத்திக்குத்து காயத்துடன் லொறிக்கு அருகில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: அண்மையில் வவுனியாவில் நடந்த பயங்கர சம்பவத்தை மறக்கவே முடியாது.
(3ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்கலாசாலை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
பலாலி ஆசிரிய கலாசாலை தற்காலிகமாக இன்று காலை 10 மணிக்கு திருநெல்வேலி கலாசாலை வீதி பழைய சைவ ஆசிரிய கலாசாலை கட்டிடத்தில் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் ஆர். எஸ் நடராசாவினால் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தர
(4-ம் பக்கம் பார்க்க)

## சகல காசோலைகளும் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

(கொழும்பு)
வடக்கு கிழக்கு மாகாணங்களில் வழங்கப்படும் சகல திணைக்கள காசோலைகளும் ஆறுமாத காலத்திற்கு செல்லுபடியாகுமென மத்திய வங்கி அறிவித்துள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா பொலிஸார் தினமும் சுற்றிவளைப்பு!

(திருமலை)
திருமலை நகரில் சிறிலங்கா பொலிஸாரினால் தேடுதல் வேட்டை, சுற்றிவளைப்பு போன்றவை அடிக்கடி இடம்
(4-ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-4158)

## மீண்டும் அதே இடம்

நீண்டகால புத்தக விற்பனையில் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களாகிய நாம் வாடிக்கையாளர்களின் நலன் கருதி மீண்டும் அதே இடத்தில் எமது வியாபாரத்தை ஆரம்பித்துள்ளோம் என்பதை அறியத் தருகின்றோம். பாலர் கல்வி முதல் பட்டப்படிப்பு வரையான பாடப்புத்தகங்கள் உட்பட உங்கள் புத்தகத் தேவை எதுவானாலும் நாடுங்கள்: All Ceylon Distributors. Myland Building, 119 1/1, K. K. S. Road, Jaffna.

(A-931)

# 'உலக தரிசனம்' உணவுப் பொருள் உதவி

(நெடுந்தீவு)

வடபகுதிக்கு 'உலக தரிசனம்' இரண்டு லொறிகளில் உணவுப்பொருட்கள் அனுப்பியுள்ளது.

அரிசி, மாவு, சீனி, பருப்பு, தீப்பெட்டி, லக்ஸ்பிறே, தேயிலை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக ''உலக தரிசனம்' வடபகுதி திட்டப் பொறுப்பாளர் திரு. பென் குணரத்தினம் தெரிவித்தார்.

'உலக தரிசனத்'தால் நிர்வகித்து வரப்படுகின்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்களான குருநகர், சென். ரேக், திருநெல்வேலி, பொற்பதி, கொக்குவில் மேற்கு ஆகிய இடங்களில் அமைந்துள்ள நிலையங்களின் பராமரிப்பு பிள்ளைகளின் குடும்பங்களுக்கு இவ் உணவுப் பொருட்கள் வழங்கப்படுமென்று தெரிவித்த திட்டப் பொறுப்பாளர், இவை ஆறுலட்சம் பெறுமதியுடையதென்றும் அவர் தெரிவித்தார்.

(133)

# வயிற்றோட்டத்தால் 50 பேர் மரணம்

(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் கிழக்கு மாகாணமான எலிபன்ஜாயாவில் கடந்தவாரம் ஏற்பட்ட வயிற்றோட்ட நோயினால் சுமார் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 15 கிராமங்களில் இவ் வயிற்றோட்ட நோய் பரவியுள்ளதாகவும் பெருமளவு எண்ணிக்கையானோர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு தேவையான மருந்துவகைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

(ஏ)

# கலவரத்தின் எதிரொலி ஆந்திரமுதல்வர் இராஜினாமா

(ஹைதராபாத்)

ஆந்திர மாநில முதலமைச்சர் டாக்டர் என். சென்னாரெட்டி தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஆந்திர பிரசேதத்தில் கடந்த ஒருவாரமாக இடம்பெற்ற இந்து - முஸ்லிம் கலவரத்தை கட்டுப்படுத்த தவறியதாலே தமது பதவியை ராஜினாமா செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது ராஜினாமா கடிதத்தை அவர் உடனடியாக காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்தார். இதையடுத்து கட்சிமேலிடம் ஆந்திரநிலை குறித்து அவசர கூட்டமொன்றை கூடியது.

ஆந்திராவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதையும் பொதுச் சொத்துக்கள் சேதமானதையடுத்து முதல்வர் பதவிவிலக வேண்டுமென பல கட்சிகள் வற்புறுத்தி வந்ததும் தெரிந்ததே.

ஹைதராபாத் பழைய நகரில் பெரும் பதற்றம் நிலவுகின்றபோதிலும் கடந்த 48 மணி நேரத்தில் மோசமான கலவரம் ஏற்படவில்லையென பொலிஸார் அறிவித்துள்ளனர். எனினும் கடந்த 48 மணி நேரத்தில் 12 பேர் கொல்லப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (சி)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வரவு செலவுத்திட்டம் 1991

1991-ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் [அத்தியாயம் 252] (212) (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12-12-1990.

[ஏ-932]

# ஒத்துழைக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மாற்றிக் கொடுப்பதில் உள்ள சிரமங்களைத் தவிர்ப்பதற்காக ஆயுட்காப்புறுதிக்கான கட்டுப்பணங்களை குறிப்பிடும் அளவினைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்,

இவ்வாறு காப்புறுதிக்கூட்டுத்தாபன யாழ். கிளை பிராந்திய முகாமையாளர் திரு. கே. அப்புத்துரை தெரிவித்துள்ளார்.

(153)

## இராசி பலன்

14-12-1990
வெள்ளிக்கிழமை

திரயோதசி வைகறை 6-10 வரை, விசாகம் பி. இ. 3-05 வரை இராகுகாலம் காலை 10-51 முதல் 12-21 வரை, நல்ல நேரம் காலை 6-21 முதல் 7-51 வரை சித்தயோகம், பிரதோஷ விரதம்.

மேடம்-உற்சாக வரவேற்பு, பொதுப்பணி, ஈடுபாடு, குடும்ப மகிழ்ச்சி, தொழில் வெற்றி.

இடபம்- எதிர்பாராத உறவு, குடும்ப மேன்மை, வாக்கு கலகம், சகோதரர் உதவி.

மிதுனம்- குடும்ப கவலை, பயணங்களால் அலைச்சல், தொழில் குறைவு, புத்திரர் செலவு.

கடகம்- கண்ணில்ரோகம், வைத்திய செலவு, பொருளாதாரக்கஷ்டம், தொழில் போட்டி.

சிங்கம்- புதிய சிந்தனை, தொழில் லாபம், விருந்துபசாரம், கருத்துவேற்றுமை, மனச்சுமை.

கன்னி-காரியத்தடை, பெரியோர் பகை, தொழில் கஷ்டம், நண்பர் பகை.

துலாம்- பணவரவு, எதிர்பாராத உதவி, தொழில் பாராட்டு, நோய் தணியும், குடும்ப சிறப்பு.

விருச்சிகம்- சுபகாரிய செலவு, அறிஞர் சந்திப்பு, பயணம், அந்நிய வாசம், அகால போஜனம்.

தனுசு- புதிய கண்டுபிடிப்பு, தொழில் பாராட்டு, குடும்ப கௌரவம், மனமகிழ்ச்சி, கடன்வசூல்.

மகரம்- மனமாற்றம், குடும்பவேதனை, காரியதடை, ஏமாற்றம், வேண்டாதஉறவு.

கும்பம்- இடமாற்றம், அதிகாரிகள் சினம், கடமை உணர்வு, தொழில் நஷ்டம், பிரிவு.

மீனம்- தொழில் வாய்ப்பு, பொதுத்துறை ஈடுபாடு, பணவரவு, குடும்பத்தில் சுபகாரியம், புகழ்.

ஜோஸ்யர்.

# சேதமுற்ற இறங்குதுறை திருத்தியமைக்கப்பட்டது

(புலோலி)

பருத்தித்துறை துறைமுகத்திலுள்ள சேதமான இறங்குதுறை மண்மூடைகள் அடுக்கி பனைமரங்களை அரண்களாக அமைத்து திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டு கால மிகப் பழமை வாய்ந்த இறங்குதுறை சீரற்ற காலநிலையாலும், இழுவைப்படகுகளின் உரசவாலும் சேதமடைந்திருந்ததையடுத்தே இத்திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டன. (61)

# வான் தாக்குதலால் அலுவலகங்கள் இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறையில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற வான் தாக்குதலையடுத்து ஏற்பட்ட பதற்றத்தினால் பருத்தித்துறை தபால்நிலையம் வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகம்" வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகியன இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

தபால்நிலையம் சிவன்கோவில் வடக்குப் பக்கத்திலுள்ள தும்பளை வீதிக்கும் வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்கும் வேலாயுதம் மகாவித்தியாலயம் புற்றளை மகா வித்தியாலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. (61)

# வலி-மேற்குப் பகுதியில் நாய்கள் தொல்லை

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்குப்பகுதியில் குறிப்பாக வட்டுக்கோட்டைப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. அப்பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் ஒழுங்கைகளில் கூட்டம் கூட்டமாக நின்று பிரயாணிகளைத் துரத்திக் கடிப்பதோடு வீதிகளையும் மோசமான முறையில் அசிங்கப்படுத்தி வருகின்றன.

விசர்நாய்க்கடிக்குத் தற்போது ஆஸ்பத்திரிகளில் மருந்து இல்லாதிருப்பதால்பொது மக்கள் பெரிதும்பாதிப்படைய வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லையில் இருந்து பொது மக்கள் விடுபடவேண்டுமானால் இவற்றைப் பிடித்துக் கொல்வதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமெனக்கேட்டுக் கொள்ளப்படுகிறது. (139)

# யாழ். ஆஸ்பத்திரிக்குள் வாகனம் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதி வாசலில் வாகனங்களில் கொண்டுவரப்படும் நோயாளர்கள் நேற்றுமுன் தினம் முதல் வாகனங்களில் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நோயாளர்களை இறக்கிவிட்டு வாகனங்கள் அங்கே தரிக்காமல் உடனே வெளியே செல்ல வேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநோயாளர் பிரிவு பொதுசன பாவிப்புக்கான பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(153)

# நிலுவையாக உள்ள வரிகளை செலுத்தி உதவ கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையால் பாரிய அளவில் பாதிப்புற்ற இந்நிலையிலும்கூட வரியிறுப்பாளர்களுக்கு வழங்கக்கூடிய ஆகக் குறைந்த பட்ச அத்தியாவசிய சேவைகளையாவது வழங்கவேண்டிய கடப்பாடு மாநகரசபைக்கு உண்டு என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வரியிறுப்பாளர்களிடமிருந்துசபைக்கு பெரும் தொகையான பணம், மின் சாரவரி, சோலைவரி, வியாபார வர்த்தகவரிகள் போன்றவை நிலுவையாகஉள்ளன. மாநகர சபையானது தனது சேவைகளை வரியிறுப்பாளர்களுக்கு வழங்கக்கூடிய விதத்தில்பகுதி பகுதியாகவாவது நிலுவைப் பணத்தினைச் செலுத்தி உதவுவதோடு, இவ்விடயத்திற்கு வரியிறுப்பாளர்கள் முக்கியத்துவம் கொடுத்துவவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

[153]

# படகு சேவை கட்டணம் குறைப்பு

(வேலணை)

அனலைதீவு குறிகாட்டுவான் இறங்குதுறைகளுக்கிடையில் கடற்போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் மோட்டார் படகின் பிரயாணக்கட்டணம் கடந்த 10-ம் திகதி முதல் குறைக்கப்பட்டுள்ளது.

அனலைதீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு செல்லும் ஒவ்வொருவரும் ஒருவழி பயணக் கட்டணமாக ரூபா ஐந்தும் துவிச்சக்கரவண்டி கொண்டுவந்தால் அதற்கு நான்கு ரூபாவும் அறவிடப்படும்.

அனலைதீவு-குறிகாட்டுவான் படகுச்சேவையில் ஒரு நபரிடமிருந்து பயணக்கூலியாக நாற்பது ரூபா அறவிடப்பட்டுவந்தது.

இதேவேளை நயினாதீவு குறிகாட்டுவான் இறங்குதுறை கடற்பிரயாணத்திற்கான மோட்டார் படகுக்கூலியும் குறைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இத்துறை முகங்களுக்கிடையிலான தனிநபர் கடற்பிரயாண மோட்டார் கூலி 10/- ரூபாவாக இருந்து வந்தது.

தற்பொழுது ஒருநபரிடம் ஒருவழிப்பாதைக்கட்டணமாக ரூபா 3/- மட்டும் அறவிடப்படும். துவிச்சக்கர வண்டியை படகில் கொண்டு செல்ல வேண்டியிருப்பின் அதற்கும் ஏற்றுக் கூலியாக ரூபா 3/- அறவிடப்படும்.

## உப்புக்கும் உலைவைப்பு!

உப்பில் கைவைத்தவன் எவருமே உருப்படியாக எதுவும் சாதித்ததாக தெரியவில்லை!

''உப்பு எடுக்கச் சட்டம் இடம்கொடாது'' என்று ஆங்கிலேயர், இந்தியர்களைத் தடுத்து நிறுத்தினர்.

அதன் விளைவு, ''சொந்த மண்ணில் விளைந்த உப்பைஎடுக்கும் உரிமை எமக்குண்டு'' என்று மகாத்மா காந்தி ஆரம்பித்த உப்புச் சத்தியாக்கிரகம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே ஆட்டம்காண வைத்தது.

ஆண்டாண்டு காலமாக ஆனையிறவில் விளைந்துவரும்உப்புஇந்த மண்ணுக்குச் சொந்தமானது. அதைக்கூடி உருப்படியாகப் பெறமுடியாத அவலம் இன்று ஏற்பட்டுள்ளது.

சந்தையில் உப்பின் விலை கிலோ எட்டு ரூபா! உப்புக்கு மா இந்த விலை என்று பாட்டி வேறு அங்கலாய்ப்பு!

உப்பு என்ன உப்பு! உப்போடுகூடியமுப்பத்திரண்டுக்குமே எமது மண்ணில் உலைவைப்பு நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

நாம் வாழும் பூமி, மொழி, செய்யும் தொழில் பெறத்துடிக்கும் கல்விஉட்பட அனைத்திலுமே அரசின் அதர்மக்கரங்கள் பட்டு சீரழிந்து வருகின்றன!

எம் மண்ணில் விளையும் சுண்ணக்கல் தரும் சீமெந்துக்கும் புல்மோட்டை கடற்கரை அள்ளிவீசும் இல்மனைட்க்கும் கிழக்கிலங்கை வைக்கோல் உருமாற்றும் கடதாசிக்கும் அரசின் அனுக்கிரகங்களை நாட வேண்டியது போல இன்று ஆனையிறவு உப்புக்கும் ஆகிவிட்டது?

ஆனையிறவு உப்பளத்தில் கடமையாற்றும் 350 நிரந்தர ஊழியர்களும், 300 தற்காலிக ஊழியர்களும் கடந்த ஆறு மாதங்களாக வேதனம் எதுவுமின்றி வேதனையில் துடிக்கிறார்கள்.

உப்பளத்தை மீண்டும் இயக்க அனுமதியும், ஊழியர்களுக்குரிய வேதனத்தை வழங்க ஆவன செய்யுமாறு வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. எஸ், வேலாயுதபிள்ளை தேசிய உப்புக் கூட்டுத்தாபன தலைவர் திரு. டயஸிடம் வலியுறுத்தியபோது–

''அதைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வேலை செய்யாதவர்களுக்கு எப்படிச் சம்பளம் வழங்குவது'' என்றும் வேதாந்தம் பேசியுள்ளார்.

அவ்வாருயின் ''வேலையே நடக்க முடியாதபடி தடுக்கும் இராணுவத்துக்கும், அதற்கு அனுசரணையாக இருந்துவரும் அரச உயர் அதிகாரிகளுக்கும் வழங்கப்படுவது வேதனமா? அல்லது இந்த நாட்டு மக்கள் பணத்திலிருந்து அளிக்கப்படும் சீதனமா?என்றுதான் கேட்கத் தோன்றுகிறது!

எவை எப்படியாயினும் எதுவும் எமக்கு என்று இருக்கவேண்டும். இல்லை என்ருல் எல்லாமே ஒருமுழம் கட்டைதான்!

— மயூரன்

# சனி மகர ராசிக்கு மீண்டும் செல்வதால்

# சிங்கள பேரினவாத அச்சுறுத்தலிலும்

# தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கும்!!

நவக்கிரக பீடத்தில் மக்களிடம் மிகவும் அச்சத்தைத்தூண்டுவதே சனி பகவான்தான். இத்தகு சனிபகவான், கடந்த ஆறுமாதகாலமாக வக்கிரகதியில் சஞ்சாரம் செய்து, மீண்டும் தனுராசியை அடைந்து, இன்றுமுதல் மகரராசியில் சஞ்சாரம்செய்யவுள்ளார். இன்று முதல் சனிபகவான் தனது சொந்த வீட்டில் பலமடைகின்றார்.

கிரகங்கள் சஞ்சாரரீதியில் பின்னோக்கிச் செல்கின்றன. அப்போது அந்தக் கிரகங்கள் மிகவும் வலிமையடைகின்றன. இதைத்தான் வக்கிரம் என கூறுகின்றோம். பிரதான கிரகங்களாகிய சனி, செவ்வாய், குரு போன்றவர்களுக்கு 5ல் சூரியன்வரும்போது வக்கிரம் உண்டாகிறது .7ல் சூரியன் சஞ்சரிக்கும்போது அதிக வக்கிரம் ஏற்படுகிறது. சூரியன் ஒன்பதில் சஞ்சரிக்கும் போது முழுவதும் வக்கிர நிவர்த்தியேற்படுகின்றது வக்கிரமடையும் கிரகங்கள் எந்தக் கிரகமும் சேர்க்கையின்றி தனித்து வக்கிரமடைந்தால் வலிமையான உயர்பலன்கள்கொடுக்கின்றனர்.

உண்டாகின்றன. அந்தக்கிரகம் வக்கிரகதியில் வேறொரு கிரகத்துடன் சேர்க்கைபெறும் போதும் பலம் பொதுவாக குன்றிக்காணப்படுகிறது. சூரியனுக்கு அருகில் புதனும், சுக்கிரனுமிருப்பதால் அடிக்கடி வக்கிரம் உண்டாகி வக்கிரநிவர்த்தியும் ஏற்படுகிறது.

புதன் வருடத்தில் மூன்று முறையும், சனி, குரு வருடத்தில் சில மாதங்களும், செவ்வாய் மட்டும் வருடத்தில் ஒரு முறைதான் வக்கிரமடையும்.

கிரகங்கள் வக்கிரம்பெறும் போது, கோடிக்கணக்கான மக்கள் பாதிப்படைகின்றனர். செவ்வாய் வக்கிரம் அமையும்போது, அவர் மேஷம் விருச்சிக ராசிகளுக்கு அதிபதியாக உலகரீதியில் பல்வேறு பாதிப்புகளை உண்டாக்குகின்ருர். மூன்று கிரகங்கள் வக்கிரமடையும்போது நாட்டிற்கு பல்வேறு சோதனைகள் உண்டாகின்றன. சனி மகரராசியில் பிரவேசித்துள்ளதால், தனுசு, மகரம், கும்பம் ஆகிய இராசியாளருக்கு ஏழரைச்சனியின் காலம், துலாம் இராசியாளருக்கு அர்த்தாஷ்டம சனி. கடகராசியினருக்கு கண்டச்சனி. மிதுனராசியினருக்கு அஷ்டமச்சனி. சிங்கம், விருச்சிகம், மீனம் ஆகியராசியினருக்கு நற்பலன்கள். மேஷம், இடபம், கன்னி ஆகிய இராசியினருக்கு மத்திம பலன்கள்.

## ஜோஸ்யர் கணிப்பு

வக்கிரகதி சூரியனுக்கோ, சந்திரனுக்கோ ஏற்படுவதில்லை. வக்கிரகாலத்தில் இராகு கேது நற்பலனையும், அசுபர்கள் வக்கிர காலத்தில் இழப்பு விரயம் போன்ற தீய பலன்களையும்

சனி மீண்டும் மகரராசியில் பிரவேசித்திருப்பது நீண்டகாலமாக இன்னல்களை அனுபவித்துவரும் தமிழருக்கு நல்ல முடிவை ஏற்படுத்திக் கொடுக்கும். போர் அச்சுறுத்தல் நிலைமைகள் மாறி தமிழர் தாயகத்தை அரசு ஆதரித்து தமிழர்களின் உரிமைகளை வழங்கும் நிலை ஏற்படும். இதற்கான சாத்தியங்கள் ஜனவரி பதினைன்காம்திகதிக்கு பின்னர் உருவாகும். குறிப்பாகச் சொல்லப்போனல் சிங்கள பேரினவாதத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாகவும், தமிழர் வாழ்வில் நலன்கள் பயக்கும் பலன்களாகவும் அமையும்.

இனி சனிபகவானின் இராசிவாரியான பலன்களை நோக்குவோம்.

மேஷம்: எங்கும் எதிலும் முதலிடம் வகிக்கும் மேஷராசியினருக்கு சனிபகவான் 10-ம் வீட்டில் இருந்து 3, 7, 10-ம் பார்வையாக 12, 4, 7-ம் வீடுகளைப் பார்வை செய்வார். இதனுல் தொழில் முதலீடுகளும் தொழில் மாறவும் வாய்ப்புண்டு. பூர்வீக சொத்தில் இருந்த தடை நீங்கும். சகோதரர் வழியில் சுப நிகழ்வுகள் இடம்பெறும். மாணவர் கல்வியில் வெற்றி பெற வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு இதுகாலவரையும் இருந்த தொல்லைகள் நீங்கி பதவி உயர்வு கிட்டும். பெண்களுக்கு திருமணம் கூடிவரும். தடைப்பட்ட காரியங்கள் கைகூடும். கலைஞர்கள் மார்ச் மாதத்தின் பின்னர் உயர்வடைவர். இந்த ராசியினருக்கு சனி ராகுவுடன் சஞ்சரிக்கும் காலம் நீங்கியதும் உயர் நிலை கிட்டும்.

இடபம்: இலகிய மனமும் இனிய வார்த்தையும் கொண்ட இடப ராசியினருக்கு சனிபகவான் 9-ல் அமர்ந்து 3, 7, 10-ம் பார்வையாக 3, 6, 11-ம் வீடுகளைப் பார்வையிடுவதால் கடன்கள் கட்டுக்கடங்கும். தந்தைக்கு தோஷமுண்டு. எதிலும் ஒருவகை சலனமுண்டு. பய உணர்வு இருந்துவரும். வேலைப்பளு அதிகமாகும். இடமாற்றம் உண்டு. செய் தொழில் கவனம் தேவை. உயர் அதிகாரிகளின் கெடிபிடிகளைத் தளர்த்திக் கொள்ளலாம். பங்காளருடன் எச்சரிக்கையாக இருப்பது நன்று. பெண்களாயின் குடும்பத்தில் நிலவிய குழப்பநிலை குறையும். விவாகரத்துக்கள் சாதகமாகலாம். சக ஊழியருடன் விட்டுக்கொடுத்து பழகுதல் நன்மை தரும். மாணவராயின் கல்வியில் சுணக்கமுண்டு.

(மிகுதி நாளை)

# வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

22-ம் திகதி மாலை 6-30 மணியளவில் நானும் லொறிச் சாரதியும், கிளீனருமாக மூன்றுபேர் லொறியில் புறப்பட்டோம். எமது லொறி நீர்வேலியைச் சேர்ந்த கந்தசாமி என்பவருக்கு சொந்தமானது. நான் காசாளராகவும் பல்வேறு கடமைகளையும் செய்து வருகின்றேன்.

### தடைமுகாம்களை கடந்து

எமது லொறி புறப்பட்டு பல்வேறு தடைமுகாம்களையும் பல சோதனைமுகாம்களையும் தாண்டி மிகுந்த சிரமத்தின் மத்தியில் பிரயாணம் செய்து 23-ம் திகதி இரவு வவுனியா மூன்றுமுறிப்பு சர்வோதய முகாமை அடைந்து விட்டோம். இங்கு இராணுவ முகாமும்உண்டு. தொடர்ந்து பயணம் செய்ய எம்மைப் படையினர் அனுமதிக்கவில்லை. எனவே லொறியை சர்வோதய மூகாம் வாசலில் நிறுத்திவிட்டு அன்றைய இரவுப் பொழுதைக் கழித்தோம்.

### வவுனியாவில் ஊரடங்கு

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தியதையடுத்து எமது லொறி உட்பட 10 லொறிகள் சர்வோதய முகாமிற்கு முன் நிறுத்தப்பட்டிருந்தன.

10 லொறிகளிலும்சாரதிகள் கிளீனர்கள் உட்பட 21 பேர் பிரயாணம் செய்தோம். லொறியில் நித்திரை செய்வதும் கடைகளில் அகப்பட்டதை சாப்பிடுவதுமாக ஒருவாறு பகல் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தோம்.

25-ம் திகதி இரவு 11 மணியிருக்கும் இடையிடையே மழை பெய்துகொண்டிருந்தது. லொறிகளுக்குக்கீழும், லொறியின் சாரதி சீற்றிலும், லொறியின் உட்பகுதியிலுமான இடங்களில் நித்திரை செய்தோம். திடீரென ஆளரவம் கேட்டது. நான் பயத்திஞல் எதுவித சத்தமும் செய்யாது நித்திரை செய்வது போல் நடப்பதை அவதானித்துக் கொண்டிருந்தேன்.

### 20 பேர்கள் வந்தனர்

20 பேர்கள் வரை இருக்கும் என நினைக்கிறேன். மழைக்காக றெயின் கோட் அணிந்தபடி இருந்தார்கள். ''தம்பி! தம்பி! எங்கட லொறி வழியில் புதைந்து விட்டது: உடன் வந்து லொறியைத் தள்ளிவிடுங்கள்'' எனக் கூறினார்கள். அவர்களுடைய உரையாடல் சுத்த தமிழாகவும் இல்லாமல் சிங்களமாகவும் இல்லாமல் இரண்டும் கலந்த ஓர் மொழியாக காணப்பட்டது. அவர்களின் பேச்சு ஒருவகையில் பயமுறுத்துவது போலவும் காணப்பட்டது.

### பலர் எழுந்தனர்

படுத்திருந்த எங்களில் பலர் எழுந்து அவர்கள் பின்னே சென்ருர்கள். சுமார் 11 பேர் இருக்கும் என நம்புகின்றேன். அவர்களுள் 2 பேர் இயற்கைக்கடன் கழிப்பதாகக் கூறி பற்றைக்குள் சென்றுவிட்டார்கள். ஆக மொத்தம் 9 பேர் அவர்களுடன் கூடச் சென்றனர். என்னுடன் லொறிக்குள் நித்திரை செய்தவரும் அவர்களுடன் போய் லொறிதள்ள வேண்டும் எனக் கூறியபடி எழுந்து செல்ல முயற்சித்தார். நான் பேசாவல் படும் என்று கூறியதால் அவரும் படுத்துவிட்டார். அதனுல் இன்று அவர் உயிர் பிழைத்தார்.

### நீண்டதூரம் சென்றனர்

குறிப்பிட்ட 9 பேரும் நீண்ட தூரம் கூட்டிச் செல்லப்படுவதை அவதானித்தேன். மிகுந்த பயத்தினுல் அன்று இரவு நித்திரை கொள்ள முடியாமல் போய் விட்டது.

26-ம் திகதி காலையில் நித்திரையால் எழுந்து பார்த்த போது எமது லொறிக்கு முன் முகத்தில் கத்திக்குத்து காயத்துடன் ஒரு சடலம் காணப்பட்டது.

குறிப்பிட்ட சடலம் காரைநகரை சேர்ந்தவருடையது. வைற் ஹவுஸ் முதலாளியின் சகோதரனுடையது எனப்பின்னர் அறிந்தேன்.

(சடலம் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டு உறவினர்களால் தகனம் செய்யப்பட்டுவிட்டதாகவும் பின்னர் தகவல் கிடைத்தது.)

சடலத்தைப் பார்த்த நானும் என்னுடன் இருந்தவர்களும் லொறிகளை அப்படியே விட்டுவிட்டு வவுனியா பொலிஸ் நிலையம் சென்று நடைபெற்ற சம்பவம் பற்றி முறைப்பாடு செய்தோம்.

அழைத்துச்செல்லப்பட்ட மிகுதி 8 பேரின் நிலைமை பற்றியோ அல்லது அவர்களது சடலங்களையாவது தேடும் முயற்சி மேற்கொண்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. பெரும்பாலும் அவர் கொல்லப்பட்டிருப்பார்கள் என அஞ்சுகிறேன்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு ஊரடங்கு நீக்கப்பட்டதும் வவுனியாவிலிருந்து சைக்கிளில் புறப்பட்டு கடந்த 8-ம் திகதி யாழ்ப்பாணம் வந்தடைந்தேன். (க)

## அடிப்படை வசதி கிடைக்க உதவுங்கள்

(கொக்குவில்)

''ஸ்ரீலங்கா அரசபடையினராலும், முஸ்லிம் காடையர்களாலும் கொலை செய்யப்பட்டும், நாளாந்தம் சொல்லொணுத் துன்பம் அனுபவிக்கும் தென் தமிழீழ மக்களுக்கு உதவிபுரிய அனைவரும் முன்வரவேண்டும்''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி வலிகாமப் பொறுப்பாளர் செல்வி சித்திரா அண்மையில் கொக்குவில் கிழக்கு வளர்மதி கிராம முன்னேற்றக்கழக முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில்உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் தென் தமிழீழ மக்கள் உண்ண உணவின்றி உடுக்கஉடையின்றி வாழ்வதற்கு இடம் இன்றி, காடுகளிலும் மேடுகளிலும் கட்டாந்தரைகளிலும் அலைந்து திரிகிருர்கள்.

மருத்துவ வசதியோ வேறு எந்தவித அடிப்படை வசதிகளோ இன்றி அல்லல்படும் தென் தமிழீழ சகோதரர்களுக்கு உதவிட அனைவரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமோ அல்லது வேறு எந்த சர்வதேச நிறுவனங்களோ கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு உதவுவதாகத் தெரியவில்லை என்ருர்.

ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது ஒருவார நிவாரணத்தை கிழக்குவாழ் தமிழருக்கு வழங்கவேண்டும் என்றகோரிக்கை ஏற்கப்பட்டது. இக் கூட்டத்தில் பலரும் உரையாற்றினர். (க)

## பலதும் பத்தும்

### ஒரே ராசியில் 8 கிரகங்கள்

நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை எட்டுக் கிரகங்களும் ஒரு ராசியில் கூடுவதுண்டு. 5-2-1962-ல் ராகு தவிர்ந்த மற்ற எட்டுக் கிரகங்களும் மகரராசியில் கூடியிருந்தன. அன்று சூரியன் திருவோணம் 4-ல், சந்திரன் திருவோணம் 4-ல், செவ்வாய் உத்தராடம் 4-ல், புதன் அவிட்டம் 1-ல், குரு அவிட்டம் 1-ல், சுக்கிரன் அவிட்டம் 1-ல், சனி திருவோணம் 1-ல், ராகு ஆயிலியம் 3-ல, கேது அவிட்டம் 1-ல் சஞ்சரித்தன.

இக்காலத்தில் பிறந்த ஆண் அல்லது பெண்ணுயினும் பிற்காலத்தில் மகான்களாக, ஞானிகளாக, துறவிகளாக மட்டும் மாறிவிடுவர் என்பது உண்மை.

- ஞானி

# ஆனையிறவு ராணுவமுகாமில் படையினர் குவிப்பு!

(நாவற்குழி)

ஆனையிறவு இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டு வருவதுடன் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டும் வருகிறார்கள்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஆனையிறவு இராணுவ முகாமிற்கு தினமும் இராணுவத்தினர் ஏற்றியிறக்கப்பட்டு வருகிறார்கள்.

இம்முகாமில் பாதுகாப்பு அரண்களும் அண்மைக்காலங்களில் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

விசேட பயிற்சிபெற்ற படையினர் கொழும்பிலிருந்து விமான மார்க்கமாகப் பலாலிக்கு வந்து பின்னர் அங்கிருந்து கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தங்களை எந்நேரமும் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே இம்முகாம் பலப்படுத்தப்பட்டு வருகிறது. (107)

## வலி. வடக்கில் 'ஷெல்' தாக்குதல்

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் நேற்று பரவலான ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

காலை 8மணியளவில் கட்டுவன் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், அதையடுத்து ஷெல் தாக்குதலும் இடம்பெற்றன.

பல தடவைகள் விமானங்கள் வந்து பலாலியில் இறங்கிச் சென்றன.

தெல்லிப்பழையை அடுத்த கட்டுவன்புலம், சித்தியம்புளியடி பகுதிகளில் பல ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. (86)

## மரணச் செலவு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு 102 விண்ணப்பதாரிகளுக்கு மரணச் செலவு கொடுப்பனவு காசாக வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயல்திட்டப்பணிப்பாளர் திரு. செ பத்மநாதன் இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளார். (153)

## உத்தியோகத்தரை கணவர் தாக்கினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண செயலகத்தில் கடமையில் இருந்த பெண் உத்தியோகத்தரை தமது கால் சட்டைப் பெல்ட்டினால் தாக்கிய கணவர் இளைஞர் கோஷ்டியால் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் இடம்பெற்றது. இதுசம்பந்தமாக பெண் உத்தியோகத்தரைத் தாக்கிய அவரது கணவரை யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் விசாரணைக்குட்படுத்தினார். (எஸ்)

## ஆசிரியர் கலாசாலை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் இத்திறப்பு விழாவில் பிரதமவிருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (153)

## ஸ்ரீலங்கா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றுவருகின்றன.

இச்சுற்றிவளைப்பின்போது பல தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச்செல்லப்படுகிறார்கள்.

இவ்வாறு விசாரணைக்கு கொண்டு செல்லப்படுபவர்கள் விடுதலை செய்யப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## பிழையான தகவல் கொடுத்தவருக்கு தண்டனை

(நாவற்குழி)

ஒரு நபரைப்பற்றி இன்னொருவர் பிழையான தகவலைக் கொடுத்துத்தண்டனை வாங்கிக் கொடுத்தார். தண்டனை பெற்றவர் நிரபராதி எனப் பின்னர் நிரூபிக்கப்பட்டதும் பிழையான தகவல் கொடுத்தவரை விடுதலைப் புலிகள் கைது செய்து தண்டனை விதித்தனர்.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த பொ. ஜெயக்குமார் என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த இ. பரமானந்தம் என்பவரிடம் வெளிநாடு செல்லப் பணம் கொடுத்ததாகவும், அந்தப் பணத்தைத் திருப்பித் தரவில்லையென்றும் பொய்யான முறைப்பாடு ஒன்றின் மூலம் பரமானந்தத்திற்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தார்.

ஜெயக்குமார் என்பவர் பணத்தைத் திரும்பவும்வாங்கிவிட்டுப் பொய் முறைப்பாட்டைச் செய்தார் என பரமானந்தம் பல ஆதாரங்களுடன் நிரூபித்ததனை தொடர்ந்து தண்டனை வாங்கிக் கொடுத்த ஜெயக்குமாருக்கு தென்மராட்சிப் பிரிவுத் தமிழீழ விடுதலைப் புலிகள் தண்டனை வழங்கியுள்ளார்கள். (107)

## விசேட பரீட்சைக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எழுதமுடியாத சகல மாணவர்களும் விசேட பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவரென பரீட்சைத்திணைக்கள ஆணையாளர் ஆதர் வெதமுல அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான திகதி அனுமதி கிடைத்ததும் இதற்கான நேர அட்டவணை வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

## திருமலையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போகும்வரை இது பற்றிய தகவலெதனையும் பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

## திருகோணமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

மூதூர் தபாலதிபர், கட்டைபறிச்சானை சேர்ந்த குணசீலன் தம்பலகாமம் ராஜி ஆகியோர் கடத்தப்பட்டவர்களில் சிலராவார் எனத்தெரிவிக்கப்படுகிறது. (வி)

## அதிபர்களுக்கு கோட்ட ரீதியான கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

தென்தமிழீழ மக்களின் நிவாரண நடவடிக்கைகள் பற்றியும், இன்றைய பாடசாலைகளின் அடிப்படைப்பிரச்சனைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட கல்விப்பிரிவு, உதவிக்கல்விப் பணிப்பாளரையும், கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும் தவறாது கோட்டரீதியாக சமூகம் தரும்வண்ணம் அன்பாக வேண்டுகின்றார்கள்:

யாழ். கோட்டம்; கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், மருதனாமடக்கோட்டம்: இராமநாதன் கல்லூரியிலும் இன்று 14ம் திகதி நடைபெறும். தென்மராட்சிக் கோட்டம்: றிபேக் கல்லூரியிலும், வடமராட்சிக் கோட்டம்: வட இந்துமகளிர் கல்லூரியிலும் நாளை 15ம் திகதியும் நடைபெறும். பண்டத்தரிப்பு கோட்டம்: மகளிர் கல்லூரியிலும், வேலணை கோட்டம்: மத்திய மகாவித்தியாலயத்திலும் இம்மாதம் 17ம் திகதி நடைபெறவுள்ளது.

## காரைநகரில் ஹெலித் தாக்குதல் மாணவர் வீடுதிரும்பினர்

(வேலணை)

தீவுப் பகுதியை நோக்கி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட ஹெலிகொப்டர் காரைநகர்ப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதையடுத்து தீவுப்பகுதியில் பாடசாலைகளுக்குச் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் உடனடியாக தத்தம் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

கடந்த 12-ம் திகதி காலையில் நடந்த ஹெலி தாக்குதலைத் தொடர்ந்து பாடசாலைகளும் உடனடியாக மூடப்பட்டு பள்ளிப்பிள்ளைகள் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

விவசாயிகள் தங்களதுவேலைகளையும் அப்படியே நிறுத்திவிட்டுப் பயப்பீதி காரணமாக வீடுகளுக்குச் சென்றனர்.

இதேபோல மீனவர்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் தொழில் பார்ப்பவர்கள் எல்லோரும் கடைகளைப் பூட்டிவிட்டு அவர்களும் பாதுகாப்பான இடங்களைத்தேடிச் சென்றனர்.

## சகல காசோலைகளும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காசோலைகளில் ஒருமாத காலம் செல்லுபடியாகுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும் சகல வங்கிகளும் காசோலைகளை ஆறுமாதகால எல்லைக்குள் மாற்றிக்கொடுக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (எஸ்-ரி)

## ஜே. வி. பி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிந்தியாவில் பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள ஜே. வி. பி. தலைவர் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை 19-ல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள ஆறு கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் சேவை நியமனம் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சைகள் இம்மாதம் 19 ம் திகதியிலிருந்து 29 ம் திகதிவரை யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

தங்கள் பாடசாலை அதிபர்களினால் அந்தரங்க அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட தகுதிபெற்ற தொண்டர் ஆசிரியர்கள் இந்த நேர்முகப்பரீட்சைகளுக்கான அழைப்புக் கடிதங்களை தங்கள் பிரிவுகளைச் சேர்ந்த கோட்டக்கல்வி பணிமனைகளில் இன்றிலிருந்து 18ம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாமென தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 19, 20, 21ம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறவிருக்கிறது.

யாழ்ப்பாண கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 19, 20-ம் திகதிகளில் பிற்பகல் ஒரு மணிக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறவிருக்கிறது.

மருதனாமடம் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்ததொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 21 22, 24ம் திகதிகளில் பிற்பகல் ஒரு மணிக்கு நேர்முகப்பரீட்சைகள்நடைபெறவிருக்கிறது

வேலணை கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாதம்21 22, 24 ம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறவிருக்கிறது.

சாவகச்சேரி கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 24,26-ம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு நேர்முகப்பரீட்சைகள் இடம்பெறவிருக்கிறது.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 27, 28, 29 ம் திகதிகளில் காலை 8-30 மாலை 4 மணிவரை நேர்முகப்பரீட்சைகள் நடைபெறவிருக்கிறது. [153]

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன் லேனில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81,

## யாழ். நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வினுள் தஞ்சமடைந்தனர்.

பாதுகாப்பு வலயத்திற்கு மேலாக வட்டமிட்ட ஹெலி திடீரென முற்றவெளி பக்கம் நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. சுமார் 15 நிமிடம் இத் தாக்குதல் நீடித்தது. (153)

## அதிரடிப்படை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கட்டப்பட்ட நிலையில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## தமிழர் பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதற்கான முயற்சிகளில் முன்னர் ஈரோஸ் அமைப்பின் முக்கியஸ்தராக இருந்த அருளர் என்பவர் ஈடுபட்டுவருவதாகவும் அச்செய்திகள்மேலும் தெரிவிக்கின்றன.

இந்த யோசனைக்கு இந்திய தரப்பில் ஆதரவு வழங்கப்படும் சாத்தியம் இருப்பதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் இதனை மறுத்தள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கு மாத்திரமே 2000 ரூபாவுக்கு மேற்படாமல் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

## ஊர்காவல்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியைச் சேர்ந்த மூன்றுபேரும், கிண்ணியாத்துறையைச் சேர்ந்த ஒருவரும் ஊர்காவல் படையால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. வி)

## போராட மகனை ஒப்படைத்த தந்தை

[நாவற்குழி]

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலுள்ள அரசன் நகரை சேர்ந்த திரு. மு. ஆறுமுகம்என்பவர் தனது 17 வயது மகன் ராம்ராஜ் என்பவரை விடுதலை போராட்டத்தில் சேர்ப்பதற்காக தானே முன்வந்து பச்சிலைப்பள்ளி வட்டப் பொறுப்பாளர் திரு. சுந்தனிடம் ஒப்படைத்த வீரமிகு சம்பவம் நேற்று பச்சிலைப் பள்ளியில் இடம் பெற்றது.

இந்த உணர்ச்சி மிகு தந்தையைப் பார்த்து பலரும் வியந்தனர். (107)

## மரண அறிவித்தல்

### திருமதி கார்த்திகேசு சின்னத்தங்கம்

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு - சின்னத்தங்கம் 13-12-90 அன்று காலமானார். இவர் காலம்சென்ற கார்த்திகேசுவின் அருமை மனைவியும், காலஞ்சென்ற கனகரட்ணம், சந்திராதேவி (கனடா), பாலசிங்கம் (ஜேர்மனி), தருமலிங்கம் ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, நாகபூசணி, சோமசுந்தரம், கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அருமைச்சகோதரியும், உதயசுந்தரம் (கனடா), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், நடராசா (மலேசியா) வின் அன்பு மைத்துனியும், சகிதன், குகவதனி, ஜெயந்தினி, சுதர்சினி (கனடா), ருசிதரன், ருசிகுமார், தர்சிகா, தருமினி, துவிகரன் ஆகியோரின் அருமைப்பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தகவல்:
கா. தருமலிங்கம்

(சி 4180)